# உலக வங்கி

## நடைபெறவுள்ள இலங்கைக்கான, நாட்டு பங்காளித்துவ உபாயம் (2012 – 2016) தொடர்பான பொதுக் கருத்துக்கள் மற்றும் உரையாடலுக்கு அழைப்பு

தனிநபர்கள், பொது நிறுவனங்கள் மற்றும் பொது அமைப்புக்கள் உள்ளடங்கலாக அனைத்து உறுப்பினர்களையும், பொது மக்களையும், நடைபெறவுள்ள இலங்கைக்கான நாட்டு பங்காளித்துவ உபாயம் (CPS) குறித்த கலந்தாலோசனை செயற்பாட்டில் பங்கேற்குமாறு உலக வங்கி அழைப்பு விடுக்கின்றது.

உலக வங்கி தாம் செயற்பட்டு வரும் ஒவ்வொரு நாட்டிலும், ஒவ்வொரு 3-4 வருடங்களுக்கும் நாட்டு பங்காளித்துவ உபாயத்தினை (CPS) தயாரிக்கும். நடைமுறையில் உபாயமானது 2012ஆம் ஆண்டு ஜுன் மாதத்துடன் நிறைவடைகின்றது. எனவே, எமது அடுத்த நாட்டுக்கான பங்காளித்துவ உபாயத்தை தயாரிக்கும் முயற்சியை நாம் தற்போது ஆரம்பித்துள்ளோம்.

அடுத்த நான்கு வருடங்களுக்கு (2012 முதல் 2016 வரை), உலக வங்கியினால் வழங்கப்படும் ஆதரவுக்கான அடிப்படை, குறிக்கோள்கள், உபாயங்கள் மற்றும் வழிகளை அமைப்பதே, CPSஇன் குறிக்கோளாக இருக்கின்றது. இலங்கை அரசாங்கம் மற்றும் பொது மக்கள், சிவில் சமூக நிறுவனங்கள், தனியார் துறை மற்றும் நாட்டின் அபிவிருத்தி பங்காளர்கள் உள்ளடங்கலாக ஏனைய முக்கியமான பங்குதாரர்களுடன் மிக நெருக்கமான கலந்தாலோசனையின் அடிப்படையில் இந்த ஆவணம் தயாரிக்கப்பட்டுள்ளது. தமது சிறந்த பங்களிப்பை வழங்கக் கூடிய ஒப்பீட்டளவில் சாதகத் தன்மையைக் கொண்ட தெரிவு செய்யப்பட்ட பகுதிகளில் நாட்டின் தொலைநோக்கிற்காக அடையாளம் காணப்பட்ட பெறுபேறுகளை எட்டுவதற்கு உலக வங்கிக் குழு இலங்கை அரசாங்கத்திற்கு உதவி செய்வதற்கு எதிர்பார்க்கின்றது.

***பதிவு செய்தல்:***
இந்த கலந்தாலோசனைகளில் கலந்து கொள்வதற்கு நீங்கள் ஆர்வமாக இருப்பின், உங்களுடைய விருப்பிற்கான ஆர்வத்தை (150 சொற்களுக்கு அதிகரிக்காமல்) இணைக்கப்பட்டுள்ள படிவத்துடன் (எமது இணையத்தளத்தில் www.worldbank.lk பதிவிறக்கிக் கொள்ளலாம்) எமக்கு அனுப்புங்கள்.

அஞ்சல் மூலம்:
CPS கலந்தாலோசனைகள்,
C/O திரு. ஹா.்.பிஸ் ஷைனுதீன்,
73/5, உலக வங்கி,
காலி வீதி,
கொழும்பு 3, இலங்கை.

அல்லது மின்னஞ்சல் மூலம்: lkcps1216@worldbank.org , அல்லது தொலைநகல் மூலம்: 2440357/5561352

இருக்கைகள் மற்றும் பங்குபற்றுநர்களின் எண்ணிக்கை என்பன மட்டுப்படுத்தப்பட்டுள்ளமையினால், முதலில் வருகையை உறுதி செய்பவருக்கு முன்னுரிமை என்பதன் அடிப்படையில் பங்குபற்றல் சந்தர்ப்பம் வழங்கப்படும் என்பதனை அறியத் தருகின்றோம். பொது கலந்தாலோசனையை 2012ஆம் ஆண்டு பெப்ரவரியில் கொழும்பு, கண்டி, மாத்தறை, யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு ஆகிய இடங்களில் (பங்குபற்றுநர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து) நடத்துவதற்கு எதிர்பார்த்துள்ளோம். பதிவு செய்த பங்குபற்றுநர்களுக்கு அஞ்சல் அல்லது மின்னஞ்சல் ஊடாக தகவல் வழங்கப்படும். 2011ஆம் ஆண்டு,

டிசம்பர் மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் பங்குபற்றுதல் குறித்த உங்களுடைய விருப்ப ஆர்வத்தை எமக்கு தெரியப்படுத்தவும்.

மேலதிக தகவல்களுக்கு facebook (www.facebook.com/worldbanksrilanka) ஊடாக எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்.